ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 4.1 – போதலர்ந்த

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.1 – போதலர்ந்த

‡ போதலர்ந்த பொழிற் சோலைப் ⋆
புறம் எங்கும் பொரு திரைகள் ⋆
தாதுதிர வந்தலைக்கும் ⋆
தட மண்ணித் தென் கரை மேல் ⋆
மாதவன் தான் உறையும் இடம் ⋆
வயல் நாங்கை ⋆
வரி வண்டு தேதென என்றிசை பாடும் ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.1** ‖

யாவருமாய் யாவையுமாய் ⋆
எழில் வேதப் பொருள்களுமாய் ⋆
மூவருமாய் முதலாய ⋆
மூர்த்தி அமர்ந்துறையும் இடம் ⋆
மா வரும் திண் படை மன்னை ⋆
வென்றி கொள்வார் மன்னு நாங்கை ⋆
தேவரும் சென்றிறைஞ்சு பொழில் ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.2** ‖

வா நாடும் மண் நாடும் ⋆
மற்றுள்ள பல் உயிரும் ⋆
தானாய எம் பெருமான் ⋆
தலைவன் அமர்ந்துறையும் இடம் ⋆
ஆனாத பெருஞ்செல்வத்து ⋆

அரு மறையோர் நாங்கை தன்னுள் ⋆
தேன் ஆரும் மலர் பொழில் சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.3** ॥

இந்திரனும் இமையவரும் ⋆
முனிவர்களும் எழில் அமைந்த ⋆
சந்த மலர்ச் சதுமுகனும் ⋆
கதிரவனும் சந்திரனும் ⋆
எந்தை ! எமக்கருள் என நின்று ⋆
அருளும் இடம் எழில் நாங்கை ⋆
சுந்தர நற் பொழில் புடை சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.4** ॥

அண்டமும் இவ்வலை கடலும் ⋆
அவனிகளும் குல வரையும் ⋆
உண்ட பிரான் உறையும் இடம் ⋆
ஒளி மணி சந்தகில் கனகம் ⋆
தெண் திரைகள் வரத் திரட்டும் ⋆
திகழ் மண்ணித் தென் கரை மேல் ⋆
திண் திறலார் பயில் நாங்கைத் ⋆
திருத்தேவனார் தொகையே ॥ **4.1.5** ॥

ஞாலம் எல்லாம் அமுது செய்து ⋆
நான்மறையும் தொடராத ⋆
பாலகனாய் ஆலிலையில் ⋆
பள்ளி கொள்ளும் பரமன் இடம் ⋆
சாலி வளம் பெருகி வரும் ⋆
தட மண்ணித் தென் கரை மேல் ⋆

சேல் உகளும் வயல் நாங்கைத் ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.6** ‖

ஓடாத ஆள் அரியின் ⋆
உரு ஆகி இரணியனை ⋆
வாடாத வள் உகிரால் ⋆
பிளந்தளைந்த மாலதிடம் ⋆
ஏடேறு பெருஞ்செல்வத்து ⋆
எழில் மறையோர் நாங்கை தன்னுள் ⋆
சேடேறு பொழில் தழுவு ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.7** ‖

வார் ஆரும் இளங்கொங்கை ⋆
மைதிலியை மணம் புணர்வான் ⋆
கார் ஆர் திண் சிலை இறுத்த ⋆
தனிக் காளை கருதும் இடம் ⋆
ஏர் ஆரும் பெருஞ்செல்வத்து ⋆
எழில் மறையோர் நாங்கை தன்னுள் ⋆
சீர் ஆரும் மலர் பொழில் சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.8** ‖

கும்ப மிகு மத யானை ⋆
பாகனொடும் குலைந்து வீழ ⋆
கொம்பதனைப் பறித்தெறிந்த ⋆
கூத்தன் அமர்ந்துறையும் இடம் ⋆
வம்பவிழும் செண்பகத்தின் ⋆
மணம் கமழும் நாங்கை தன்னுள் ⋆

செம் பொன் மதிள் பொழில் புடை சூழ் ⋆
திருத்தேவனார் தொகையே ‖ **4.1.9** ‖

‡ கார் ஆர்ந்த திருமேனிக் ⋆
கண்ணன் அமர்ந்துறையும் இடம் ⋆
சீர் ஆர்ந்த பொழில் நாங்கைத் ⋆
திருத்தேவனார் தொகை மேல் ⋆
கூர் ஆர்ந்த வேற் கலியன் ⋆
கூறு தமிழ் பத்தும் வல்லார் ⋆
எர் ஆர்ந்த வைகுந்தத்து ⋆
இமையவரோடிருப்பாரே ‖ **4.1.10** ‖

அடிவரவு — போது யாவரும் வானாடும் இந்திரனும் அண்டமும் ஞாலம் ஓடாத வாராரும் கும்பம் காரார்ந்த கம்பமா

போதலர்ந்த முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்